இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"திருஅவை ஒன்றே ஒன்றுதான், ஆனால் அது உலகிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியது. நற்செய்தியை இதுவரை அறிந்திராதவர்கள் கூட ஏதோ ஒரு வகையில் இறை மக்களோடு தொடர்பு கொண்டுள்ளார்கள்," என்று திருத்தந்தை கூறுகிறார்.

# "திருஅவை என்பது அமைதி மற்றும் ஒற்றுமையின் அடையாளம்; இதில் அனைவருக்கும் இடமுண்டு"


(@Vatican Media)

கடந்த மார்ச் 11ஆம் நாள் வத்திக்கான் தூய பேதுரு சதுக்கத்தில் நடைபெற்ற வாராந்திர பொதுக்கூட்டத்தில், திருத்தந்தை 14-ஆம் லியோ 'லூமென் ஜென்சியம்' (திருஅவை பற்றிய கோட்பாடு) ஆவணம் குறித்த தனது விளக்கத்தைத் தொடர்ந்தார். பிரிவினைகளும் பதற்றங்களும் நிறைந்த இவ்வுலகில், கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தினால் ஒன்றிணைக்கப்பட்டுள்ள திருஅவையின் பணி என்ன என்பதை அவர் விளக்கினார்.

கிறிஸ்துவில் ஒன்றிணைக்கப்பட்டுள்ள திருஅவை, தனக்குள்ளேயே சுருங்கிவிடக் கூடாது. அது அனைவருக்கும் திறந்திருக்க வேண்டும்; அது அனைவருக்கும் உரியது. போர்களும் மோதல்களும் நிறைந்த இக்காலத்தில், பல்வேறு தேசத்தவர், மொழியினர் மற்றும் கலாச்சாரத்தைச் சார்ந்த மக்கள் ஒரே விசுவாசத்தில் இணைந்து வாழ்வது, உலகிற்கு ஒரு பெரிய நம்பிக்கையின் அடையாளம் என்று அவர் குறிப்பிட்டார். "கடவுள் தனது பிள்ளைகள் அனைவரையும் அழைக்கின்ற அந்த அமைதி மற்றும் ஒற்றுமைக்குத் திருஅவை ஒரு முன்னோடியாகவும், தீர்க்கதரிசனமாகவும் விளங்குகிறது," என்றார் அவர்.

### இறைவன் தேர்ந்தெடுத்த மக்கள்

இறைவன் ஒவ்வொரு மனிதனையும் மீட்க விரும்புகிறார். இதற்காக அவர் வரலாற்றில் ஒரு உண்மையான மக்களைத் தேர்ந்தெடுத்தார்:

- பழைய ஏற்பாடு: ஆபிரகாமை அழைத்து, அவரது வழிமரபினருடன் ஒரு உடன்படிக்கை செய்து அவர்களைத் தனது மக்களாக மாற்றினார். அவர்கள் பிற நாடுகளுக்கு ஒரு 'ஒளிவிளக்காக' இருக்க அழைக்கப்பட்டனர்.
- புதிய ஏற்பாடு: இந்த உடன்படிக்கை கிறிஸ்துவில் நிறைவு பெற்றது. கிறிஸ்து தனது உடலையும் இரத்தத்தையும் கையளிப்பதன் மூலம், மக்களைத் தம்மோடு ஒரு நிலையான உறவில் இணைத்துக் கொண்டார்.

### நமது அடையாளம் என்ன?

இன்று திருஅவையின் உண்மையான அடையாளம் என்பது "இறை மக்கள்" என்பதாகும். நாம் மொழி, கலாச்சாரம் அல்லது இனத்தினால் ஒன்றுபடவில்லை; மாறாக இயேசு கிறிஸ்துவினால் ஒன்றுபட்டுள்ளோம்.

"திருஅவையில் இருப்பவர்கள் தங்களின் தகுதியையோ அல்லது பதவிகளையோ எண்ணிப் பெருமைப்படக் கூடாது. கிறிஸ்து வழியாக நாம் 'இறைவனின் பிள்ளைகள்' ஆகியிருக்கிறோம் என்பதே நமக்குரிய ஒரே உயரிய கௌரவம்," என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார். மேலும், திருஅவையின் உறவுகளை வழிநடத்தும் ஒரே சட்டம் "அன்பு" மட்டுமே என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

### வேற்றுமையில் ஒற்றுமை

"திருஅவை ஒன்றே ஒன்றுதான், ஆனால் அது உலகிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கியது. நற்செய்தியை இதுவரை அறிந்திராதவர்கள் கூட ஏதோ ஒரு வகையில் இறை மக்களோடு தொடர்பு கொண்டுள்ளார்கள்," என்று திருத்தந்தை கூறுகிறார்.

திருஅவை எல்லா கலாச்சாரங்களையும் வரவேற்கிறது; அதே சமயம் நற்செய்தியின் வழியாக அந்தக் கலாச்சாரங்களைத் தூய்மைப்படுத்தி மேம்படுத்துகிறது. பிரெஞ்சு இறையியலாளர் ஹென்றி டி லூபக் (Henri de Lubac) கூறியதை மேற்கோள் காட்டி திருத்தந்தை உரையை நிறைவு செய்தார்: "மீட்பின் பேழை ஒன்றே ஒன்றுதான், ஆனால் அது மனிதகுலத்தின் அனைத்து வேற்றுமைகளையும் தனது அகன்ற பரப்பில் வரவேற்று அரவணைக்க வேண்டும்."

தமிழாக்கம் ஹெரால்ட்

# திருத்தந்தை 14-ஆம் லியோ இரங்கல்: "மத்திய கிழக்கில் அமைதி நிலவச் செபிப்போம்"

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் குண்டுவெடிப்புத் தாக்குதல்களில் உயிரிழந்த அப்பாவி மக்கள், குழந்தைகள் மற்றும் அவர்களுக்காகப் பணியாற்றி உயிரிழந்த அருட்பணியாளர் பியர் எல்-ராஹி (Fr. Pierre El-Rahi) ஆகியோருக்காகத் திருத்தந்தை 14-ஆம் லியோ தனது ஆழ்ந்த துயரத்தையும் செபங்களையும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வத்திக்கான் செய்தித் தொடர்பகம் கடந்த மார்ச் 9ஆம் நாள் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"மத்திய கிழக்கில் கடந்த சில நாட்களாக நடைபெறும் குண்டுவெடிப்புகளில் பலியானோருக்காகத் திருத்தந்தை 14-ஆம் லியோ மிகுந்த வருத்தம் கொள்கிறார். குறிப்பாகப் பல அப்பாவி மக்கள், குழந்தைகள் மற்றும் அவர்களுக்கு உதவி செய்தபோது கொல்லப்பட்ட லெபனான் நாட்டு மரோனைட் கத்தோலிக்க அருட்பணியாளர் பியர் எல்-ராஹி ஆகியோரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அங்கு நிலவும் போர்ப் பதற்றங்கள் விரைவில் முடிவுக்கு வர வேண்டுமென்று அவர் தொடர்ந்து செபித்து வருகிறார்."

லெபனான் நாட்டின் 'கிளாயா' (Qlayaa) பகுதியில் பணியாற்றி வந்த 50 வயதுடைய அருட்பணியாளர் பியர் எல்-ராஹி, திங்கட்கிழமை மதியம் ஒரு தாக்குதலின் போது கொல்லப்பட்டார். ஒரு வீட்டின் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கேள்விப்பட்டு, அங்கு சிக்கியிருந்த மக்களைக் காப்பாற்றத் அருட்பணியாளர் பியர் விரைந்து சென்றார். அப்போது மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் படுகாயமடைந்து, மருத்துவமனையில் உயிரிழந்தார்.

அப்பகுதியில் மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்ட போதிலும், தனது மக்களைத் தவிக்க விட்டுச் செல்ல மனமில்லாமல், அவர்களுக்குப் பணிவிடை செய்ய அங்கேயே தங்கியிருந்தார் இந்த நல்லாயன்.

அருட்பணியாளர் பியரின் மறைவு அப்பகுதி கிறிஸ்தவர்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. டயர் (Tyre) பகுதி பங்கின் அருட்பணியாளார் தௌஃபிக் மெர்ஹி (Fr. Toufic Merhi) கூறுகையில், "மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற அஞ்சுகிறார்கள். வெளியேறினால் தெருவில் தங்க வேண்டிய நிலை ஏற்படும், ஏனெனில் நாட்டின் பொருளாதாரச் சூழல் மிக மோசமாக உள்ளது," என்றார். தற்போது கத்தோலிக்க மடாலயங்கள் பல அகதிகளுக்கு அடைக்கலம் அளித்து வருகின்றன.

"ஆயுதங்கள் ஒருபோதும் அமைதியை உருவாக்காது; அவை அழிவையும் வெறுப்பையுமே உண்டாக்கும்" என்று திருத்தந்தை மீண்டும் நினைவூட்டியுள்ளார். போரினால் வாடும் மக்கள் கௌரவமாக வாழவும், வன்முறைகள் ஒழியவும் நாம் அனைவரும் இணைந்து செபிப்போம் வாரீர்.

தமிழாக்கம் ஹெரால்ட்

# சினோடு அறிக்கை: திருஅவையின் வாழ்விலும் தலைமையிலும் பெண்களின் பங்களிப்பு



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அமைக்கப்பட்ட ஆய்வு குழுக்களின் வரிசையில், ஆய்வு குழு எண் 5-ன் இறுதி அறிக்கையை சினோடு பொதுச் செயலகம் தற்போது வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை 'திருஅவையின் வாழ்விலும் தலைமையிலும் பெண்களின் பங்களிப்பு' குறித்து விரிவாக ஆராய்கிறது.

திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களின் விருப்பப்படி, திருஅவையின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக இந்த ஆவணங்கள் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

### அறிக்கையின் முக்கிய மூன்று பகுதிகள்

இந்த அறிக்கை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. பின்னணி: இந்தக் குழு எவ்வாறு உருவாக்கப்பட்டது மற்றும் அதன் செயல்பாட்டு முறைகள் பற்றிய விளக்கம்.
2. கருத்துகளின் தொகுப்பு: திருஅவையில் பொறுப்பான பதவிகளில் இருக்கும் பெண்களின் அனுபவங்களைக் கேட்டு, அதன் அடிப்படையில் உருவான சிந்தனைகள்.
    - காலத்தின் அறிகுறி: திருஅவையில் பெண்களின் பங்களிப்பு என்பது தூய ஆவியானவர் இன்று திருச்சபைக்கு வழங்கும் ஒரு முக்கிய அழைப்பு (Sign of the Times) என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
    - முன்மாதிரி: திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் திருத்தந்தை 14-ஆம் லியோ ஆகியோர் வத்திக்கான் நிர்வாகத்தில் (Roman Curia) பெண்களுக்குப் பல உயரிய பொறுப்புகளை வழங்கியுள்ளனர். இது ஒட்டுமொத்த திருஅவைக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாகக் கருதப்படுகிறது.
    - உள்ளூர் திருச்சபைகள்: கலாச்சாரம் மற்றும் சூழலுக்கு ஏற்ப பெண்களின் திறமைகளைத் திருஅவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.
3. ஆதாரக் களஞ்சியம் (Appendix): திருஅவை வரலாற்றில் பெண்களின் பங்கை விளக்கும் ஆறு முக்கியப் பகுதிகள்:
    - விவிலியத்தில் (பழைய மற்றும் புதிய ஏற்பாடு) இடம்பெற்றுள்ள பெண் ஆளுமைகள்.
    - திருஅவை வரலாற்றில் முத்திரை பதித்த புனிதப் பெண்கள்.
    - இன்று திருஅவைத் தலைமையின் கீழ் பணியாற்றும் பெண்களின் சாட்சியங்கள்.
    - மரியா மற்றும் பேதுருவின் கோட்பாடுகள் குறித்த ஆய்வு (Marian and Petrine Principle).
    - திருஅவையின் அதிகாரம் மற்றும் நிர்வாகம் குறித்த விளக்கம்.
    - பெண்களின் பங்கு குறித்து திருத்தந்தையர்களின் பங்களிப்பு.

### அடுத்த கட்டம் என்ன?

இந்த அறிக்கை ஒரு 'செயல்முறை ஆவணம்' (Working Document) மட்டுமே. சினோடு பொதுச் செயலகம் இந்த அறிக்கையில் உள்ள கருத்துகளை ஆய்வு செய்து, அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்த திட்டங்களைத் தயாரிக்கும். இந்தத் திட்டங்கள் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும். அவர் அவற்றை மதிப்பீடு செய்து ஒப்புதல் அளித்த பிறகு, அவை திருஅவையின் அதிகாரப்பூர்வ முடிவுகளாக மாற்றப்படும்.

வத்திக்கான் இணையதளத்தில் (www.synod.va) ஆங்கிலம் மற்றும் இத்தாலிய மொழிகளில் இந்த முழு அறிக்கை கிடைக்கிறது.

தமிழாக்கம் ஹெரால்ட்

# தீபகற்ப மலேசியாவில் 1,100-க்கும் மேற்பட்டோர் திருமுழுக்குப் பெறத் தயாராக உள்ளனர்.





எதிர்வரும் உயிர்ப்புப் பெருவிழாவின் (Easter) போது, தீபகற்ப மலேசியக் கத்தோலிக்கத் திருஅவையில் 1,212 புதிய உறுப்பினர்கள் இணைய உள்ளனர். கடந்த ஆண்டு 1,047 ஆக இருந்த இந்த எண்ணிக்கை, இந்த ஆண்டு உயர்ந்துள்ளதைக் கண்டு திருஅவை மகிழ்ச்சியடைகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ "தேர்ந்தெடுக்கப்படுதல் சடங்கு" (Rite of Election) மூன்று மறைமாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

### கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

புனித யோவான் பேராலயத்தில் (Cathedral of St John) நடைபெற்றச் சடங்கிற்கு பேராயர் ஜூலியன் லியாவ் தலைமைத் தாங்கினார். இதில் 32 பங்குகளைச் சேர்ந்த 687 புகுமுக நிலையினர் (Catechumens) கலந்துக்கொண்டனர்.

பேராயர் தனது உரையில், ஆபிரகாமின் பயணம் மற்றும் இயேசுவின் உருமாற்ற நிகழ்வை நினைவூட்டினார். "விசுவாசப் பயணம் என்பது ஒரு புதிய படிநிலை. இதற்கு நமது 'வசதியானச் சூழலை' (Comfort zone) விட்டு வெளியே வரும் துணிச்சல் தேவை. தூய ஆவியானவர் உங்களை வழிநடத்தி, உருமாற்ற அனுமதிப்பதன் மூலம் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல்





மற்றும் நற்கருணை எனும் திருவருட்சாதனங்களைப் பெறத் தயாராகுங்கள்," என்று அவர் ஊக்கப்படுத்தினார்.

### மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டம்

ஜொகூர் பாரு, திருஇருதயப் பேராலயத்தில் நடைபெற்ற சடங்கில் 295 புகுமுக நிலையினர் பங்கேற்றனர். ஆயர் பெர்னார்ட் பால் ஒரு முட்டையை உருவகமாகக் கொண்டு கிறிஸ்தவ வாழ்வை விளக்கினார்:

- உள்ளடக்கம் (Content): இறைவனையும் அவரது வார்த்தையையும் அறிந்துகொள்ளுதல்.
- பிணைப்பு (Cohesion): பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையே நிலவும் ஒற்றுமை.
- உறுதி (Consolidation): உடைக்க முடியாத வலுவான விசுவாசம் எனும் ஓடு. மேலும், "விசுவாசம், குடும்பம் மற்றும் ஆன்மீகத் தகுதி" ஆகியவற்றில் உறுதியாக இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

### பினாங்கு மறைமாவட்டம்

பினாங்கு மறைமாவட்டம், ஈப்போ தூய அமல உற்பவ அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற சடங்கில் கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ் 230 பேரைத் 'தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக' அறிவித்தார்.

கிறிஸ்தவ வாழ்வின் பயணத்தை ஒரு "அழகான சாகசம்" என்று குறிப்பிட்ட அவர், "நீங்கள் தேர்ந்தெடுத்த இந்தப் பாதை, உங்களுக்கு நிறைவான வாழ்வைத் தரும் உண்மையை நோக்கி உங்களை அழைத்துச் செல்லும்," என்றார். இந்த நிகழ்வின் போது, ஞானப்பெற்றோர்களும் பரிந்துரையாளர்களும் தங்களின் கைகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தோள்களில் வைத்து, அவர்களுக்குத் துணையாக இருப்போம் என உறுதி அளித்தனர். உயிர்ப்புப் பெருவிழா வரை இவர்களுக்காகத் தனது ஒவ்வொரு திருப்பலியிலும் செபிப்பதாகக் கர்தினால் உறுதியளித்தார்.

தமிழாக்கம் ஹெரால்ட்





## தவக்கால ஆன்மீகப் பயிற்சி



செராஸ் புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில் தவக்கால உருவாக்கப் பயிற்சி கடந்த பிப்ரவரி 28ஆம் தேதியன்று நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு இந்த அரை நாள் ஆன்மீக பயிற்சியைச் சிறப்பாக அருட்பணியாளர் போனாவெஞ்சர் வழிநடத்தினார்.

தவக்காலத்தின் உண்மையான ஆன்மீக அர்த்தத்தை உணர்த்தும் வகையில், ஜெபம், தவம் மற்றும் தியாகம் ஆகிய மூன்று முக்கிய கருப்பொருளை மையமாகக் கொண்ட உரைகளும் கலந்துரையாடல்களும் இப்பயிற்சியில் இடம்பெற்றன. அருட்பணியாளர் போனாவெஞ்சர் வழங்கிய ஆன்மீக உரை பங்கேற்பாளர்களை ஆழமாக சிந்திக்கத் தூண்டியது.

40 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆர்வத்துடன் கலந்துரையாடலில் பங்கேற்றனர். தவக்காலத்தில் விசுவாசிகள் மேற்கொள்ள வேண்டிய ஆன்மீகப் பயணம் குறித்து புதிய பார்வையையும் ஆழ்ந்தபுரிதலையும் பெற வாய்ப்புக் கிடைத்தது.

இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்கள், இந்த ஆன்மீகச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைந்ததாகத் தெரிவித்தனர். தவக்காலப் பயணத்தை மேலும் அர்த்தமுள்ளதாக மேற்கொள்ள இந்த நிகழ்ச்சி அவர்களுக்கு ஊக்கமளித்தது.



## நம்பிக்கையின் வழி மீட்பு

**மார்ச் 22 – தவக்கால 5ஆம் ஞாயிறு**
**வாசகங்கள்: எசேக்கியேல் 37:12-14, திருப்பாடல்கள் 130:1-2, 3-4, 5-6, 7-8, உரோமையர் 8:8-11, யோவான் 11:1-45**

மருத்துவம் தொடர்பானத் தொலைக்காட்சித் தொடர்களில் நாம் அடிக்கடி காணும் காட்சியில் மரணத்தின் விளிம்பிலுள்ள ஒரு நோயாளி அவசர சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டு வரப்படுவார். மருத்துவர்கள் பதற்றத்துடன் போராடுவார்கள். இதயத் துடிப்பு நின்றுபோகும் தருணத்தில், ஒரு மருத்துவர் மட்டும் நம்பிக்கையை விடாமல் மார்பழுத்தம் கொடுத்துக்கொண்டே இருப்பார். எல்லா நம்பிக்கையும் அற்றுப்போன நிலையில், திடீரென்று அந்த நோயாளி உயிர் பிழைத்து எழுவார்.

இன்றும் கூட நம்மில் பலர் பலமுறை அந்த நோயாளியின் நிலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பணப் பற்றாக்குறை, குடும்பச் சிக்கல்கள், மனநலப் போராட்டங்கள் என வாழ்க்கை நம்மை நிலைகுலையச் செய்துக்கொண்டிருக்கிறது. ஒரு மேசை மீது உயிரற்றுக் கிடக்கும் உடலைப் போல, நம் வாழ்விலும் இனி நம்பிக்கையே இல்லை என்று நாம் உணர்ந்திருக்கலாம். அத்தகைய சூழ்நிலையில் இருப்பவர்களுக்காகவே இன்றைய திருவழிபாட்டு வாசகங்கள் பதிலாக அமைந்திருக்கின்றன.

முதல் வாசகத்தில் தங்கள் நிலத்தை இழந்து, நாடுகடத்தப்பட்டு, நம்பிக்கையற்று இருந்த மக்களிடம் இறைவாக்கினர் எசேக்கியேல் பேசுகிறார். தங்கள் பாவங்களால் விளைந்த இந்தத் துயரத்திலிருந்து தங்களுக்கு மீட்பு கிடைக்குமா என அவர்கள் ஏங்கினர். இவ்வாறான துன்பங்களிலிருந்து விடுபட "ஆழத்திலிருந்து உம்மை நோக்கிக் கூவுகின்றேன்" என்று செபிக்கும் திருப்பாடல் ஆசிரியர், இறைவனின் மன்னிப்பிற்காகவும் இரக்கத்திற்காகவும் ஏங்குகிறார். தூய யோவான் எழுதிய நற்செய்தியில் நான்கு நாட்களாகக் கல்லறையில் அழுகிக் கொண்டிருந்த இலாசரின் புகழ்பெற்ற வரலாறு நமக்குச் சொல்லப்படுகிறது. மரணத்திற்குள் சிக்கிய ஒருவருக்கு இனி என்ன எதிர்காலம் இருக்க முடியும்?

இந்தக் கேள்விக்குத் தூய பவுல் இரண்டாம் வாசகத்தின் வழி பதிலளிக்கிறார்: அவரே இயேசு. நம்முடைய பாவம், வலி, இழப்பு, மற்றும் நாடுகடத்தப்பட்ட நிலையைத் தம்மேல் ஏற்றுக்கொண்ட ஆண்டவர் அவர். இலாசரின் இறப்பிற்காக அழுத கிறிஸ்து இயேசு, இன்று நமக்காகவும் கண்ணீர் வடிக்கிறார். அன்பு செய்யும் எவராலும் தன் அன்பிற்குரியவர் கல்லறையில் அழுகுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பரலோக வாழ்வுக்குப் போக வேண்டிய நாம் பாதாளத்திற்குப் போவதையும் பார்த்துக்கொண்டிருக்க கிறிஸ்துவால் முடியாது.

நமது மாபெரும் மருத்துவரான கிறிஸ்து இயேசு இரண்டாம் (திவெ 21:8) மரணம் எனும் படுகுழிக்குள் கையை நீட்டி நம்மை வெளியே அழைக்கிறார். "என் மக்களே, நான் உங்கள் கல்லறைகளைத் திறப்பேன்; உங்களை அவற்றினின்று மேலே எழச் செய்வேன்" என்று அவர் நமக்கு வாக்கு அளிக்கிறார்.

இந்தத் தவக்கால பயணத்தின் போது அநேகர் நம்மில் 'ஆவிக்குரிய மரணத்தை' அனுபவித்துக் கொண்டிருக்கலாம்; வேலையில் ஏமாற்றம், உறவினர்களால் ஏற்பட்ட காயம் அல்லது அன்புக்குரியவர்களின் இழப்பு என எதுவாகவும் இருக்கலாம். இதனால் விசுவாசச் சோர்வு, பாவ இச்சையை விட்டு வர மனமில்லாமை, வீண் பேச்சு, அவதூறுப் பேச்சு, கடவுளுக்குரிய நேரத்தை சமூக ஊடகங்களில் செலவு செய்தல், தூய ஆவியானவரின் குரலுக்குச் செவிமடுக்க விருப்பமில்லாமை என பாவத்திலிருந்து மீள முடியாமல் தவிப்பவர்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினாலே கழுவப்பட்டு, தம் தூய ஆவியானவர் வழியாக நமக்கு புதிய வாழ்வைத் தர தந்தையாம் கடவுள் விரும்புகிறார். கல்லறையிலிருந்து வெளிவந்த இலாசரைப் போல, நாமும் நம்மைப் பிணைத்திருக்கும் அனைத்து பாவங்களோடும் அதன் தளைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவோம்.

இந்த வாய்ப்பைத் தவறவிடாதிருப்போம். நம் கல்லறைகளுக்குள் கேட்கும் அளவுக்கு உரத்த குரலில் இயேசு நம்மை அழைக்கிறார்: "வெளியே வா!"

பெர்சியுஸ் ஜேம்ஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.